PGIE
POST GRADUATE INSTITUTE OF ENGLISH

# ஆங்கிலத்துக்கான பட்டப்பின் நிறுவகம்

# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

# வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள்

# 2011

## ஆங்கிலத்துக்கான பட்டப்பின் நிறுவகம்
## வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்
## 2011

### உள்ளடக்கம்


**1. தரிசன நோக்கு**

**2. இலட்சிய நோக்கு**

**3. பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் பற்றிய சுருக்கமான விபரம்**

(அ) PGIE இன் உறுப்பினர்கள் -

(i) முகாமைத்துவ சபை

(ii) TESL தொடர்பான கல்விச் சபை

(iii) இலக்கியம் கற்பித்தலுக்கான கல்விச் சபை

**4. பணிப்பாளரின் மீளாய்வு**

(அ) சுருக்கமான அறிமுகம்

(ஆ) அடைவுகள்

(இ) தோல்விகளும் நியாயப்படுத்தலும்

(ஈ) எதிர்காலத் திட்டம்

**5. பணிப்பாளரின் அறிக்கை**

**6. திருத்தப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் (புதிய படிவத்தின்படி)**

**7. கணக்காய்வுக்குழுவின் அறிக்கை**

**8. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்கள்**

**9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

**10. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில்**

## 1. தரிசன நோக்கு

மாறுகின்ற தேவைகளுக்கு முகம் கொடுக்கக்கூடியதாக நாடளாவிய ரீதியில் புலமைசார் உன்னதம் மற்றும் ஆங்கில மொழி, ஆங்கிலக் கல்வியில் ஆய்வு ஆகியவற்றில் பெருமைபெற்று தொடர்புசார் மற்றும் கற்பித்தல் திறன்களை மேம்படுத்தி தலைமைத்துவம் வகித்தல்.

## 2. இலட்சிய நோக்கு

புலமைத்துவம் மற்றும் ஆய்வு, ஆங்கில மொழி கற்பித்தல் மற்றும் ஆங்கிலக்கல்வி தொடர்பான தேசியக் கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கலில் செல்வாக்குச் செலுத்தல் ஊடாக பட்டப்பின் மட்டத்தில் ஆங்கில மொழி கற்பித்தல் மற்றும் ஆங்கிலக் கல்விக்கான வாய்ப்புக்களையும், உதவிகளையும் வழங்குதலும், தேசிய மட்டத்தில் ஆங்கிலக் கற்கைகளுக்கு புதிய நோக்குகளை வழங்குதலும்.

## 3. பணிப்பாளர்கள் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் பற்றிய சுருக்கமான விபரம்



PGIE நிர்வாக மற்றும் நிர்வாகமல்லாத ஆளணியை பூரணமாகக் கொண்டுள்ள முதலாவது ஆண்டாக 2010 விளங்குகின்றது. ஏனெனில், கல்விசார் ஆளணியில் ஒருவரையேனும் முன்னர் நிறுவகத்தினால் நியமிக்கக்கூடவில்லை. எனவே, MA TESL கற்கை நெறியுடன் கல்விச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டன.

**(அ) (i) PGIE முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள்**

| | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | பேராசிரியர் எம்.சந்திரசேகர | தலைவர், ஆங்கிலம் மீதான நிலையியற் குழு (2011.06.14 முதல்) |
| | பேராசிரியர் சீ பொன்சேகா | தலைவர், ஆங்கிலம் மீதான நிலையியற் குழு (2011.04.05 வரை) |
| 2. | கலாநிதி எச்.ரத்வத்த | பதில் பணிப்பாளர், PGIE (2011.03.01 முதல்) |
| | பேராசிரியர் ஆர் றஹீம் | பணிப்பாளர், PGIE (2011.02.28 வரை) |
| 3. | கலாநிதி ஜே மனதுங்க | தலைவர் ELTC மொறட்டுவ பல்கலைக்கழகம் |
| 4. | பேராசிரியர் ஜீ.டீ.லேகம்கே | பீடாதிபதி / கல்விப்பீடம், இ.தி.ப (இ.தி.ப மூதவை பிரதிநிதி) |
| 5. | பேராசிரியர் எஸ் வால்டர் பெரேரா | ஆங்கிலப் பேராசிரியர் ஆங்கிலத்துறை, பேராதனை பல்கலைக்கழகம் |
| 6. | பேராசிரியர் நெலூக்கா சில்வா | தலைவர் / ஆங்கிலத்துறை, கொழும்பு பல்கலைக்கழகம் |
| 7. | கலாநிதி டீ மெண்டிஸ் | சிரேஷ்ட விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம் |
| 8. | திரு.வீ.சுந்தரேசன் | தலைவர் / ஆங்கிலத்துறை, கொழும்பு பல்கலைக்கழகம் |
| 9. | கலாநிதி டீ தேவேந்திர | தலைவர் / மொழி கற்கைத்துறை - இ.தி.ப |
| | கலாநிதி கே.வர்ணபால | பதில் தலைவர் / மொழி கற்கைத்துறை - இ.தி.ப |
| 10. | கலாநிதி எஸ்.ஜே.நவரத்ன | செயலாளர் / கல்வி அமைச்சு (01.08.2010 வரை) |
| | திருமதி எஸ்.பீ.எம்.கே.சிறிவர்தன | தலைமைக் கணக்காளர், உயர்கல்வி அமைச்சு பிரதிநிதி, செயலாளர் / உயர் கல்வி அமைச்சு (09.08.2011 முதல்) |

| | பெயர் | பதவி |
|---|---|---|
| 11. | பேராசிரியர் என்.ஆர்.அர்த்தநாயக்க | இ.தி.ப கவுன்சில் பிரதிநிதி (26.08.2011 முதல்) |
| | திரு.ஏ.ரணவீர | இ.தி.ப கவுன்சில் பிரதிநிதி (14.06.2011 முதல்) |
| 12. | திரு.சீ.டி சில்வா | சிரேஷ்ட விரிவுரையாளர் / புள்ளி விபர மற்றும் கணனி விஞ்ஞான திணைக்களம், களனி பல்கலைக்கழகம் |
| 13. | கலாநிதி ஜீ.கொடித்துவக்கு | பதில் பிரதிப் பணிப்பாளர் நாயகம், மொழிகள் பீடம், மானிடவியல் சமூக விஞ்ஞானங்கள், தே.க.நி (26.07.2011 முதல்) |
| | திரு.எஸ்.அட்டுகொட | பணிப்பாளர் / ஆங்கிலத்துறை / தே.க.நி பிரதிநிதி (20.06.2011 வரை) |
| 14. | டொக்டர் எச்.ரத்வத்த | (01.01.2011 முதல்) |
| 15. | செல்வி திலினி வலிசுந்தர | தலைவர் / ஆங்கிலத்துறை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 16. | திருமதி எச்.எம்.என்.எஸ்.குணவர்தன | பணிப்பாளர் நாயகம், சட்ட விவகாரங்கள் திணைக்களம் (திறைசேரி பிரதிநிதி) |

### (ii) ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பித்தலுக்கான PGIE இன் கல்விச் சபையின் உறுப்பினர்கள்

| | பெயர் | பதவி |
|---|---|---|
| 1. | கலாநிதி எச் ரத்வத்த | தலைவர், பதில் பணிப்பாளர் / PGIE (01.03.2011 முதல்) |
| | பேராசிரியர் ஆர் றஹீம் | தலைவர், பதில் பணிப்பாளர் / PGIE (28.02.2011 வரை) |
| 2. | கலாநிதி எச் ரத்வத்த | ஆங்கில சிரேஷ்ட விரிவுரையாளர், OUSL |
| 3. | பேராசிரியர் எம் குணசேகர | ஆங்கிலப் பேராசிரியர் களனி பல்கலைக்கழகம் |
| 4. | கலாநிதி ராதிகா டி சில்வா | சிரேஷ்ட விரிவுரையாளர், மொழிக் கற்கைத்துறை, OUSL |
| 5. | கலாநிதி வீ.வீ. மெதவத்தேகெதர | சிரேஷ்ட விரிவுரையாளர், மொழிக் கற்கைத்துறை, OUSL |
| 6. | கலாநிதி டபிள்யூ.எம்.செனவிரத்ன | நூலகர், OUSL |
| | செல்வி எச்.பீ.எஸ்.டீ.குணசேகர | பதில் நூலகர், இ.தி.ப (21.04.2011 முதல் 22.09.2011 வரை) |

| | பெயர் | பதவி |
|---|---|---|
| 7. | செல்வி எல்.குமாரணதுங்க | வருகைதரு விரிவுரையாளர் PGIE |
| 8. | பீ.நாகசுந்தரம் | முன்னாள் பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவனம் |
| 9. | செல்வி எச்.டீ.விஜேசேகர | மாணவர் பிரதிநிதி (26.05.2011 முதல்) |
| | செல்வி ஐ.என்.ஜீ.போகமுவ | மாணவர் பிரதிநிதி (21.04.2011 வரை) |
| 10. | திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி | மாணவர் பிரதிநிதி (26.05.2011 முதல்) |
| | செல்வி எஸ்.ஆர்.இலங்ககூன் | மாணவர் பிரதிநிதி (21.04.2011 வரை) |

## (iii) ஆங்கில இலக்கியம் கற்பித்தலுக்கான PGIE இன் கல்விச் சபையின் உறுப்பினர்கள்

| பெயர் | | பதவி |
|---|---|---|
| 1. | கலாநிதி எச் ரத்வத்த | தலைவர், பதில் பணிப்பாளர் / PGIE (01.03.2011 முதல்) |
| | பேராசிரியர் ஆர் றஹீம் | தலைவர், பதில் பணிப்பாளர் / PGIE (28.02.2011 வரை) |
| 2. | பேராசிரியர் நிலோபர் டி மெல் | ஆங்கிலப் பேராசிரியர், ஆங்கிலத்துறை, கொழும்பு பல்கலைக்கழகம் |
| 3. | பேராசிரியர் நெலுக்கா டி சில்வா | தலைவர், ஆங்கிலத்துறை, களனி பல்கலைக்கழகம் |
| 4. | கலாநிதி மைத்திரி விக்கிரமசிங்க | சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கிலத்துறை, களனி பல்கலைக்கழகம் |
| 5. | கலாநிதி டினாலி தேவேந்திர | தலைவர், மொழிக் கற்கைத்துறை இ.திப. |
| 6. | கலாநிதி கே.வர்ணபால | சிரேஷ்ட விரிவுரையாளர் / மொழிக் கற்கைத்துறை இ.திப. |
| 7. | கலாநிதி லக்ஷ்மி டி சில்வா | முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர், ஆங்கிலத்துறை, கொழும்பு பல்கலைக்கழகம், |
| 8. | கலாநிதி டபிள்யூ.எம்.செனவிரத்ன | நூலகர், OUSL |

## 4. பணிப்பாளரின் மீளாய்வு

### (அ) சுருக்கமான அறிமுகம்

2011 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு PGIE இன் முகாமைச் சபைக்கு (BOM) ஒரு புதிய தலைவரையும் இரண்டு புதிய உறுப்பினர்களையும் நியமித்தது. அத்துடன், இ.தி.ப பேரவையும் புதிய உறுப்பினரை நியமித்தது. அத்துடன், TESL BOS ஒரு புதிய உறுப்பினரைத் தெரிவு செய்தது. BOM தலைவராக இருந்த பேராசிரியர் கார்லோ பொன்சேகாவுக்குப் பதிலாக பேராசிரியர் மல்காந்தி குணசேகர நியமிக்கப்பட்டார். அத்துடன், பேராசிரியர் ரஞ்சித் அர்த்தநாயக்கவுக்குப் பதிலாக திரு.ஆர்.ஏ.ஏ.ரணவீர இ.தி.ப பேரவை சார்பாக நியமிக்கப்பட்டார்.

2011 இல் PGIE திறந்த பல்கலைக்கழகத்தின் பகுதிநேர / பதில் பணியாளர்களாலேயே கொண்டு நடத்தப்பட்டது. இவர்கள் தமது நிரந்தர பதவிசார் பணிகளுக்கு மேலதிகமாக PGIE பணிகளையும் மேற்கொண்டனர். PGIE இன் திட்டமிடப்பட்ட நடைமுறைகளுக்கு முழுநேர கல்வி மற்றும் கல்விசாரா ஆளணியினர் இல்லாமை பெரும் தடையாக இருந்தது.

நவம்பர் மாதத்தில் ஒரு சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் 2) பதவி ஏற்றுக் கொண்டார்.

நிரந்தர ஆளணி இல்லாமையின் காரணமாக, ஒரேயொரு புதிய நிகழ்ச்சித் திட்டத்தை மாத்திரமே பட்டப்பின் TESL டிப்ளோமா ஆரம்பிக்க முடிந்தது. MA TESL நிகழ்ச்சித் திட்டப்பணிகளும் தொடர்ந்தன.

PGIE க்கான புதிய கட்டட முன்மொழிவு UGC இனால் நிராகரிக்கப்பட்டது. பணிப்பாளர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், உதவி நிதியாளர் ஆகிய முக்கிய பதவிகளுக்கு நிரந்தர பணியாளர் இல்லாமையே இதற்குக் காரணமாகும்.

### (ஆ) அடைவுகள்

2011 இல் MA TESL மாணவர்கள் 6 பேர் தமது கற்கையைப் பூரணப்படுத்தி 2011 டிசம்பரில் பட்டம் பெற்றனர். இம்மாணவர்களின் ஆய்வு அறிக்கைகள் வெளியக பரீட்சகர்களினால் பெரிதும் பாராட்டப்பட்டன.

TESL பட்டப்பின் டிப்ளோமா PGIE இனால் 2011 இல் தொடங்கப்பட்டது, TESL டிப்ளோமா மற்றும் முதுமாணி நிகழ்ச்சித் திட்டங்கள் 2011 மே மாதத்தில் விளம்பரப்படுத்தப்பட்டன. 100 விண்ணப்பங்களில் 94 விற்கப்பட்டு 42 பேர் தெரிவுப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு

அவர்களில் 25 பேர் பதிவுசெய்து கொண்டனர். 37 மாணவர்கள் MA TESL கற்கை நெறியில் மீளப் பதிவு செய்து கொண்டனர்.

2011 இல் தொடங்கிய தமது ஆய்வுகளைத் தொடங்கிய ஐந்து மாணவர்கள் அவற்றை இந்த ஆண்டிலும் தொடர்ந்தனர். வருட இறுதியில் மேலும் 8 மாணவர்கள் தமது கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்து ஆய்வுகளைத் தொடங்கினர். 2005/06, 2006/07 ஆகிய வருடங்கள் MA TESL நிகழ்ச்சித் திட்டத்திற்கு பதிவு செய்த பின்னர் சொந்தக் காரணங்களால் தொடர முடியாத 03 மாணவர்கள் தற்போது 'சொந்த நேரத்தில் சொந்த வசதிகளில் கற்றல்' என்னும் தொலைக் கல்வி குறிக்கோளுக்கு ஏற்ப திரும்பவும் பதிவு செய்துள்ளனர்.

டிப்ளோமா மற்றும் முதுமாணி கற்கை நெறிகளின் காரணமாக நிறுவனத்தின் வருமானம் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இரண்டாம் மொழி சூழமைவில் இலக்கியம் கற்பித்தலில் முதுமாணி மற்றும் பட்டப்பின் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்ட முன்மொழிவு வரைவை PGIE தயாரித்தது.

நிறுவனத்தின் ஒரேயொரு நிருவாக அலுவலரின் பொறுப்புக்கள் மற்றும் வேலைச் சுமைகளின் அடிப்படையில் உதவிப் பதிவாளர் பதவி UGC சிரேஷ்ட உதவிப் பதிவாளராகத் தரமுயர்த்தியது.

2011 நவம்பரில் PGIE இன் முதலாவது நிரந்தர கல்விசார் உறுப்பினராக சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் 2) ஒருவர் பதவி ஏற்றுக்கொண்டார். 2011 ஆகஸ்ட் மாதத்தில் இன்னுமொரு சிரேஷ்ட விரிவுரையாளர் நியமிக்கப்பட்டார். அது தொடர்பான UGC யின் அனுமதியை நிறுவகம் எதிர்பார்த்துள்ளது.

**(இ) தோல்வியும் நியாயப்படுத்தலும்**

2011 இல் நிறுவனத்தின் பணிகள் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் மற்றும் உதவி நிதியாளர் ஆகிய முக்கிய அலுவலர்கள் இல்லாமையினால் பெரிதும் பாதிக்கப்பட்டன. தொடர்ச்சி இல்லாமையின் காரணமாக, அடுத்த ஐந்து வருடங்களுக்கான பெருந்திட்டம் மற்றும் ஏனைய நிர்வாக விடயங்கள் திட்டமிட்டவாறு பூர்த்தி செய்ய முடியாது. (PGIE அடுத்தடுத்து மூன்று சிரேஷ்ட உதவிப் பதிவாளர்களையும் இரண்டு பதில் உதவி நிதியாளர்களையும் செயற்பட்டிருந்தது) அத்துடன் பணிப்பாளர் பதவியை நிரப்புவதில் இருந்தே நிச்சயமற்ற தன்மையும் நிறுவகத்திற்கு இவ்வருடத்தில் சிரமத்தை ஏற்படுத்தியது.

2006 ஆம் ஆண்டு PGIE ஆரம்பிக்கப்பட்டது. அதுமுதல் ஆளணியைப் பெற்றுக்கொள்ளல், இடவசதி முதலிய பல்வேறு தீர்க்க முடியாத

பிரச்சினைகள் காரணமாக, இ.தி.ப பேரவை பேராசிரியர்கள் ஐ.சிறிவீர மற்றும் எச்.பீ.எம்.குணசேன ஆகியோர் அடங்கிய ஒரு துணைக்குழு ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நியமித்தது. அவர்களது அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (பக். 19-20)

24.06.2011 இல் இ.தி.ப பேரவைக்கு மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. பேரவை இதனை ஆராய்ந்த பின்னர் PGIE முகாமை சபைக்கு சமர்ப்பித்தது. இதனை ஏற்றுக்கொண்ட சபை (09.08.2011 இல் நடந்த 40 ஆவது கூட்டத்தில்) குறிப்பிட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படா விட்டால் PGIE வளர்ச்சியடையவோ அல்லது தனது இயலளவை முழுமையாக அடையவோ முடியாது என்ற காரணத்தினால் அதனை அவசர நடவடிக்கையாக UGC க்குச் சமர்ப்பித்தது.

2011 ஆகஸ்ட் மாதத்தில் PGIE க்கான கட்டட முன்மொழிவு UGC க்கு அனுப்பப்பட்டது. இது பணிப்பாளர், சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் மற்றும் உதவி நிதியாளர் பதவிகள் நிரந்தரமாக நிரப்பப்படாமையின் காரணமாக முன்மொழிவை நிராகரித்தது.

**(ஈ) எதிர்காலத் திட்டம்**

1. இரண்டாம் மொழி சூழமைவில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிக்கு உரிய சபைகளிடமிருந்து (BOS, BOM, மூதவை, பேரவை, ஆங்கிலம் மற்றும் பட்டப்பின் கற்கைகள், ஆய்வு தொடர்பான UGC நிலையியற் குழுக்கள்) அனுமதி பெறுதல்.

2. இரண்டாம் மொழி சூழமைவில் இலக்கியம் கற்பித்தல் தொடர்பான மூதவை கற்கை நெறிக்கு உரிய சபைகளிடமிருந்து (BOS, BOM, மூதவை, பேரவை, ஆங்கிலம் மற்றும் பட்டப்பின் கற்கைகள், ஆய்வு தொடர்பான UGC நிலையியற் குழுக்கள்) அனுமதி பெறுதல்.

3. மேற்படி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சட்டதிட்டங்களைத் தயாரிக்க உரிய சபைகளிடம் இருந்து அனுமதி பெறுதல்.

4. கல்விசார் ஆளணியினரை நியமித்தல்.

5. இரண்டாம் மொழி சூழமைவில் பட்டப்பின் டிப்ளோமா/ முதுமாணி கற்கை நெறிகளுக்கு கற்றல் சாதனங்களை (அச்சு, செவிப்புல, கட்புல, வழிவரு (Online) தயாரித்தல்

6. விமர்சன ரீதியான வாசிப்பு மற்றும் இலக்கியம் தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்கள் மீதான குறுகியகால கற்கை நெறிகளை வழங்குதல்.

**(உ) வளங்கள் மற்றும் மாணவர்கள் பற்றிய விபரங்கள்**

| நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டம் | மொத்த மாணவர்கள் | மொத்த கல்விசார் ஆளணியினர் | மொத்த கல்விசாரா ஆளணியினர் |
|---|---|---|---|---|
| PGIE | TESL முதுமாணி | 37 | 01 (01.11.2011 இல் ஒரு சிரேஷ்ட விரிவுரையாளர் பதவியேற்றார்) | 03 |
| | TESL இல் முதுமாணி / பட்டப்பின் டிப்ளோமா | 25 | | |
| மொத்தம் | 02 | 62 | 01 | 03 |

**(ஊ) உள்ளூர் மாணவர்கள் பற்றிய விபரங்கள்)**

| நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டம் | மொழி மூலம் | உள் கொடுப்பு | ஆண்டு 1 மாவணர்கள் (பகுதி I) | ஆண்டு 2 மாவணர்கள் (பகுதி II) | பட்டம் பெற்றோர் |
|---|---|---|---|---|---|---|
| PGIE | MA in TESL | ஆங்கிலம் | - | 21 | 16 | 06 |
| | பட்டப்பின் டிப்ளோமா /முதுமாணி TESL | ஆங்கிலம் | 25 | - | - | - |
| மொத்தம் | | | 25 | 21 | 16 | 06 |

**(எ) கல்விசார் ஆளணி விபரங்கள்**

| நிறுவனம் | பாடம் | மொழி மூலம் | சிரேஷ்ட பேராசிரியர் | பேராசிரியர் | சிரேஷ்ட விரிவுரை யாளர் | விரிவுரை யாளர் | உதவி விரிவுரை யாளர் | போதனா சிரியர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| PGIE | | ஆங்கிலம் | - | - | 01 | - | - | - |
| மொத்தம் | | | - | - | 01 | - | - | - |

**(ஏ) கல்விசாரா ஆளணி விபரங்கள்**

| நிறுவனம் | அதி சிரேஷ்ட ஆளணி | சிரேஷ்ட ஆளணி | கனிட்ட ஆளணி | சிற்றூழியர் |
|---|---|---|---|---|
| PGIE | - | - | 02 | 01 |
| மொத்தம் | - | - | 02 | 01 |

**(ஐ) ஆய்வு, புத்தாக்கம் மற்றும் வெளியீடுகள்**

| பாடம் | வெளியீடு | விற்பனை | சமர்ப்பிக்கப்பட்டது |
|---|---|---|---|
| அ. ஆய்வுகளின் எண்ணிக்கை | | | 01 |
| ஆ. புத்தாக்க எண்ணிக்கை | | | |
| இ. ஆய்வு சஞ்சிகை எண்ணிக்கை | | | |
| ஈ. புத்தாக்கங்களின் எண்ணிக்கை | 04 | | |
| உ. கட்டுரைகளின் எண்ணிக்கை | 01 | | |
| ஊ. ஏனைய | | | |
| ஐ. மொத்தம் | 05 | | 01 |

**(ஒ) நிகழ்ச்சித் திட்டங்கள், கருத்தரங்குகள், செயலமர்வுகள்**

| பாடம் | சமூகமளித்தல் | பூரணப்படுத்தல் | நடத்துதல் |
|---|---|---|---|
| அ. பட்டப்பின் பட்ட நிகழ்ச்சித் திட்டம் | | | 01 |
| ஆ. பட்டப்பின் டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் | | | 01 |
| இ. பட்ட நிகழ்ச்சித் திட்டம் | | | |
| ஈ. டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் | | | |
| உ. சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டம் | | | |
| ஊ. ஏனைய | | | |
| மொத்தம் | | | 02 |

**(ஓ) புதிய நிகழ்ச்சித் திட்டங்கள்**

| நிறுவனம் | நிகழ்ச்சித் திட்டம் | மொழி மூலம் | சான்றிதழ் | டிப்ளோமா | பட்டப்பின் டிப்ளோமா | முதுமாணி | முது தத்துவமாணி | கலாநிதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| PGIE | பட்டப் பின் டிப்ளோமா TESL | ஆங்கிலம் | - | - | புட்ப்பின் டிப்ளோமா | - | - | - |
| மொத்தம் | 01 | | | | | | | |

ஔ.இந்த அறிக்கை தொடர்பான ஏனைய விபரங்கள் / செயலாற்றல்கள்

பட்டப்பின் டிப்ளோமா 2011 ஒக்டோபரில் ஸ்தாபிக்கப்பட்டு, முதலில் 25 மாணவர்கள் சேர்க்கப்பட்டனர். கற்பித்தல் செயலடைவுக் கோவை எனப்படும் டிப்ளோமாவின் இறுதி மதிப்பீடு வடிவமைக்கப்பட்டு, உரிய சபைகளினால் அனுமதிக்கப்பட்டது. ELP 2101, ELP 2102 ஆகிய MA TESL இன் இரு ஆய்வு அறிக்கை நெறிகளின் பாடத்திட்டம் மற்றும் உள்ளடக்கம் திருத்தப்பட்டு ஆங்கில மொழி கற்பித்தல் மற்றும் சமூகக் கற்கைகள் மற்றும் மானிடவியலின் சமகால போக்குகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டது.

PIGE இன் முகாமைச் சபை 2005 இல் நிறைவேற்றப்பட்ட 4 ஆம் இலக்க PIGE சட்டத்தைத் திருத்துமாறு UGC இடம் கேட்டுக்கொண்டது. இச்சட்டத்தின் ஏற்பாடுகள் காரணமாக PGIE எதிர்கொள்ளும் நிர்வாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே 2010 இல் முகாமைச் சபை இதனைத் திருத்தத் தீர்மானித்தது. இதற்காக திரு.ஆர்.ஏ.ஏ.ரணவீர (OUSL பேரவை பிரதிநிதி) கலாநிதி துஷ்யந்தி மென்டிஸ் (UGC பிரதிநிதி) பேராசிரியர் ஆர்.றஹீம் (பணிப்பாளர் / PGIE) ஆகியோரைக் கொண்ட ஒரு உப குழுவை முகாமைச் சபை நியமித்தது. நிறுவகம் தனது குறிக்கோள்களை இன்னும் வினைத்திறனுடன் அடையக்கூடியவாறு திருத்தங்களை இக்குழு முன்மொழிந்தது.

சிரேஷ் உதவிப் பதிவாளரின் (சட்டம் மற்றும் ஆவணப்படுத்தல், OUSL) அவதானங்கள் பேரவையின் ஒப்புதல் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்படி திருத்தங்கள் 2011 ஆகஸ்ட் மாதத்தில் UGC க்கு அனுப்பப்பட்டது. பல்வேறு நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களிள் சட்டங்களைத் திருத்துவது சம்பந்தமாக UGC ஒரு துணைக்குழுவை நியமித்திருப்பதாக PIGE க்கு அறிவித்தது.

2011 இல் OUSL நூலகத்துடன் இணைந்த உறுப்பினருக்கும் ஏற்பாட்டை PGIE, OUSL உடன் மேற்கொண்டது. மேற்படி உறுப்புரிமை 01.01.2012 இல் பெறப்பட்டது.

## 5. பணிப்பாளரின் அறிக்கை

### கல்வி முன்னேற்றம்

2011 நவம்பரில் PGIE இன் முதலாவது நிரந்தர விரிவுரைகளைப் பதவியேற்றுக் கொண்டார்.

பணிப்பாளர், சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் மற்றும் உதவி நிதியாளர் ஆகிய பதவிகள் 2011 இல் பகுதிநேர அலுவலர்களினாலேயெ வகிக்கப்பட்டன. இதன் காரணமாக, இந்த வருடத்தில் PGIE இனால் பின்வருவனவற்றை மாத்திரமே சாதிக்க முடிந்தது.

(அ) TESL கல்விச் சபை, OGIE முகாமைச் சபை, மூதவை மற்றும் பேரவையிடம் TESL டிப்ளோமா தொடர்பான ஒழுங்கு விதிகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

(ஆ) 2011 மே மாதம் TESL பட்டப்பின் டிப்ளோமா விளம்பரப்படுத்தப்பட்டது. 100 விண்ணப்பங்களில் 94 விற்கப்பட்டன. கடந்த வருடங்களைப் போலவே தெரிவுப் பரீட்சையில் மாணவர்களின் அடைவு மிகவும் குறைவாகவே இருந்தது. இவர்கள் அனைவரும் இலங்கை பல்கலைக்கழகங்களின் பட்டதாரிகளாவர். இவர்கள் 42 பேர் தெரிவு செய்யப்பட்ட போதும் 25 பேர் மாத்திரமே பதிவுசெய்து கொண்டனர்.

(இ) MA TESL இன் கற்றல் சாதனங்கள் திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டன.

(ஈ) MA TESL இன் ஒன்பது கற்கை நெறிகள் தொடர்பான கற்பித்தல், தொடர் மதிப்பீடு, இறுதிப் பரீட்சைகள் நடத்தப்பட்டன.

(உ) MA TESL மாணவர்களை மேற்பார்வை செய்து பரீட்சித்து 6 மாணவர்களை பட்டம் பெறச் செய்யப்பட்டது,

(ஊ) 16 MA TESL மாணவர்களின் ஆய்வுகள் மேற்பார்வை செய்யப்பட்டன.

(எ) இரண்டாம் மொழியில் இலக்கியம் கற்பித்லில் முதுமாணி மற்றும் பட்டப்பின் டிப்ளோமா தொடர்பான முன்மொழிவு பூரணப்படுத்தப்பட்டது. இந்த வரைபு 2011 டிசம்பரில் தொடங்கியது,

மாணவர் செயலாற்றுகை 2010/11

அட்டவணை 1 இறுதி மதிப்பீட்டில் மாணவர் செயலாற்றுகை 2010/11

| | ELM 1301 | ELM 1201 | ELM 1202 | ELM 1203 | ELM 1101 | ELM 1102 | ELM 1104 | ELM 2101 | ELM 2102 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தோற்றியோர் | 13 | 12 | 13 | 09 | 09 | 07 | 17 | 06 | 07 |
| சித்தி | 10 | 12 | 13 | 09 | 09 | 07 | 17 | 06 | 07 |
| சித்தியின்மை | 03 (23%) | 0 (0%) | 0 (0%) | 0 (0%) | 0 (0%) | 0 (0%) | 0 (0%) | 0 (0%) | 0 (0%) |

**ஆய்வு**

2011 பெப்ரவரியில் நடத்தப்பட்ட PGIE இன் வருடாந்த ஆய்வு மன்றத்தில் எமது மாணவர்கள் தமது ஆய்வுகளைச் சமர்ப்பித்தனர். போதிய ஆளணி இல்லாத காரணத்தினால் நிறுவன ஆய்வு எதனையும் PGIE முன்னெடுக்கவில்லை.

முதுமாணிப் பட்டத்தில் ஆறு மாணவர்கள் தமது ஆய்வுகளைப் பூரணப்படுத்தினர். ஆய்வுகளின் தரம், இலங்கையில் ஆங்கிலம் கற்பித்தலிலும், பிரயோக மொழியியலிலும் அவற்றின் பங்களிப்பு ஆகிய வெளிவாரி பரீட்சகர்களான ஏனைய பல்கலைக்கழக புலமையாளர்களினால் சிலாகித்துக் கூறப்பட்டது.

**புதிய நிகழ்ச்சித் திட்டங்களும் கற்கை நெறிகளும்**

பட்டப்பின் டிப்ளோமாவின் இறுதி மதிப்பீடாக ELP 1302 கற்பித்தல் செயலடைவும் ஏற்கப்பட்டது. ELP 2101, ELP 2102 ஆகியவற்றின் பாடத்திட்டங்களின் உள்ளடக்கம் ஆகியன திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டன. வழிவரு (Online) உள்ளடக்கம் பிரயோசனமானது என மாணவர்கள் கருதுகின்றனர். புலம்பெயர்ந்த ஒரு மாணவர் வழிவரு மூலமாக தனது கற்கையை தொடர்ந்தனர்.

**பணியாளர்கள்**

2011 இல் PGIE இன் சகல முக்கிய பதவிகளும் பணிப்பாளர், SAR, AB பகுதிநேர அலுவலர்களினால் வகிக்கப்பட்டன. அவர்கள் தமது நிரந்தர பதவிகளுக்கு புறம்பாக மேற்படி கடமைகளையும் புரிந்தனர்.

பேராசிரியர் ஆர்.ரஹீம் 2011 பெப்ரவரி 28 வரை PGIE இன் நிரந்தர பணிப்பாளராகக் கடமை புரிந்தார். அவர் ஓய்வுபெற்ற பின்னர் இன்னுமொருவர் நிரந்தரமாக நியமிக்கப்படும் வரை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஹேமமாலா ரத்வத்த பதில் பணிப்பாளராக 01.03.2011 முதல் நியமிக்கப்பட்டர். தெரிவு செய்யப்பட்ட நபர் பல நீடிப்புகளை கோரியமையால் 2011 இல் பணிப்பாளர் பதவி நிரப்பப்படவில்லை. 2011 ஜுலை இப்பதவி திரும்பவும் விளம்பரப்படுத்தப்பட்டது.

31.01.2010 வரை நிரந்தர உதவிப் பதிவாளராக பணியாற்றிய திருமதி ஜீ.எஸ்.அமரதுங்க OUSL இல் சிரேஷ்ட உதவிப் பதிவாளராக பதவி உயர்வு பெற்றார். OUSL இன் மூன்று நிர்வாக அலுவலர் பகுதிநேர உதவிப் பதிவாளர்களாக PGIE இல் கடமையாற்றினார்கள். அத்துடன், வேறு இரு உதவிப் பதிவாளர்களும் அவ்வப்போது PGIE இல் கடமை புரிந்தனர். 2011 ஜனவரி 18 முதல் ஏப்ரல் 01 வரை திரு.எம்.ஐ.எம்.சுபைர் பதில் உதவிப் பதிவாளராகப் பணியாற்றினார். 01.04.2011 முதல் 25.11.2011 வரை செல்வி D.D.G.P.S.டெனியல்ஸ் (உதவிப் பதிவாளர், மூலதனப் பணிகள், OUSL) பகுதி நேரமாகப் பதவியேற்றார். 01.12.2011 முதல் திருமதி எஸ்.எஸ்.சமரதுங்க (உதவிப் பதிவாளர் / கல்விப் பீடம்) பகுதி நேரமாகப் பணியாற்றினார். இக்காலத்தில் செல்வி ரசிகா திசாநாயக்க (உதவிப் பதிவாளர் / மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்) மற்றும் செல்வி பிரியந்தா வீரசிரி (உதவிப் பதிவாளர் / இயற்கை விஞ்ஞானங்கள் பீடம்) ஆகியோரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் பகுதிநேர உதவிப் பதிவாளராக பணியாற்றினர்.

OUSL நிதிப் பிரிவிலிருந்து இரு அலுவலர்கள் PGIE இன் பதில் உதவி நிதியாளராகப் பணிபுரிந்தனர். PGIE இன் நிரந்தர உதவி நிதியாளரான செல்வி கே.கே.சேத்தியமாலி 28.02.2011 முதல் திறந்த பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட உதவி நிதியாளராக பதவி உயர்வு பெற்றார். திரு.A.W.P.S.தயானந்தா (உதவி நிதியாளர் / OUSL அச்சகம்) 01.03.2011 முதல் 16.09.2011 வரை பகுதிநேர உதவி நிதியாளராக பணியாற்றினார். செல்வி கே.கே.சேத்தியமாலி 19.09.2011 முதல் முழுநேர சிரேஷ்ட உதவி நிதியாளராக PGIE க்கு நியமிக்கப்பட்டார்.

பல்கலைக்கழக முறைமையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக தெரிவுப் பரீட்சைகளையும், நேர்முகப் பரீட்சைகளையும் UGC நடத்திக் கொண்டிருந்த காரணத்தினால் PGIE இன் உதவிப் பதிவாளர் மற்றும் உதவி நிதியாளர் ஆகிய பதவிகள் நிரப்பப்படவில்லை.

2011 இறுதிப் பகுதியில் முதலாவது விரிவுரையாளர் PGIE இல் நியமனம் பெற்றார். கலாநிதி எச்.எஸ்.ரம்புக்வெல 11.01.2011 முதல் சிரேஷ்ட விரிவுரையாளராக (தரம் 2) பதவியேற்றார்.

2011 ஜனவரியில் மேலுமொரு சிரேஷ்ட விரிவுரையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஒருவர் தெரிவு செய்யப்பட்டார். முகாமைச்சபை, மூதவை, பேரவை ஆகிய வெற்றிடம் உரிய அனுமதி பெறப்பட்டு PGIE சட்டத்தின்படி 13.12.2011 இல் UGC இன் அனுமதி பெறும் பொருட்டு உரிய ஆவணங்கள் அனுப்பப்பட்டன. மேற்படி அனுமதி இன்னும் கிடைக்கவில்லை.

**கற்போருக்கான உதவி**

MA TESL க்காக உதவிகளை OUSL நூலகம் வழங்கி வருவதோடு, PGIE இன் கல்வி வளங்களின் களயஞ்சியமாகவும் விளங்குகிறது. OUSL நூலகர் TESL கல்விச் சபையின் உறுப்பினராகவும் செயற்படுகின்றார்.

**பணியாளர்களின் செயற்பாடுகள்**

**பேராசிரியர் ஆர்.ரஹீம், பணிப்பாளர்**

**கலாநிதி ஹேமமாலா ரத்வத்த, பதில் பணிப்பாளர்**

பிரதம ஆசிரியர், VISTA ஆய்வு சஞ்சிகை, மானிடவியல் மற்றும் சமூக கற்கைகள் பீடம்.
உறுப்பினர் - OUSL தர உறுதிப்பாட்டுக் குழு
தலைவர் - பீடத்தின் தர உறுதிப்பாடு மற்றும் கற்பித்தல் வடிவமைப்புக் குழு
உறுப்பினர் - ஆசிரியர் குழு ஆலோசனைச் சபை, ஆசியா TEFL ஆய்வு சஞ்சிகை, சியோல், கொரியா
மீளாய்வாளர் - பன்மொழி விடயங்களுக்கான ஆய்வு சஞ்சிகை
மீளாய்வாளர் - இருமொழி ஆசிரியர்களுக்கான வளங்கள் தேசிய கல்வி நிறுவகம்
வருகைதரு விரிவுரையாளர் மற்றும் பரீட்சகர் பேராதனைப் பல்கலைக்கழகம் (MA ஆங்கிலம்)
பட்டப்பின் பரீட்சைகள் கல்விப்பீடம் / OUSL
வளவாளர் (முன்னாள் தலைவர்) SLE LTA (இலங்கை ஆங்கில ஆசிரியர் சங்கம்)

**ஒத்துழைப்பும் பங்காண்மையும்**

திறந்த பல்கலைக்கழகத்தின் SDC நடத்துகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு PGIE ஆதரவு வழங்குகிறது.

OUSL இன் மொழிக் கற்கைகள் துறையின் விரிவுரையாளர்கள் PGIE இன் சகல செயற்பாடுகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குகின்றனர். அவர்களது உதவி இல்லாமல் MA TESL நிகழ்ச்சித் திட்டத்தில் மாணவர்களின் ஆய்வு மேற்பார்வை சாத்தியப்பட மாட்டாது.

2011 ஆம் ஆண்டு முழுவதும் OUSL இன் உபவேந்தர், பேரவை உறுப்பினர்கள், துணை உபவேந்தர், பதிவாளர், சகல பீடங்களின் தலைவர்கள், நிதியாளர், நூலகர், பதில் நூலகர், நான்கு பீடங்களின் உதவிப் பதிவாளர்கள், கல்வித் தொழில்நுட்பவியல் பிரிவின்

பணியாளர்கள், உபவேந்தரின் அலுவலகப் பணியாளர்கள் முதலான சகலரதும் ஒத்துழைப்பு PGIE க்குக் கிடைத்தது.

முதுமாணி நிகழ்ச்சித் திட்டத்தின் கற்கை நெறிகளுக்கு பின்வருவோர் உதவி வழங்கினர். OUSL மொழிகள் கற்கைத்துறையின் செல்வி B.K.P.அபேசூரிய. கலாநிதி ராதிகா டி சில்வா, கலாநிதி V.V.மெதவத்தேகெதர, கலாநிதி டினாலி தேவேந்திர மற்றும் கலாநிதி ஹேமமாலா ரத்வத்த, தேசிய கல்வி நிறுவனத்தின் ஆங்கிலக் கல்விக்கான உயர் நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் செல்வி L.K.குமாரணதுங்க, கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஆங்கில சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி B.மெண்டிஸ், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் ELT, ETTC இன் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி M.K.S.ஐயர், OUSL சமூகக் கல்வித்துறையின் திரு.L.D.I.விஜேதுங்க, தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் நிபுணத்துவ ஆலோசகர் திருமதி N.A.L.வைத்தியசேகர, வருகைதரு விரிவுரையாளர்களான செல்வி டினாலி பெர்னாண்டோ மற்றும் திருமதி என்.திலகரட்ன. தேசிய கல்வி நிறுவக முன்னாள் பணிப்பாளர் திருமதி V.யட்டவத்த, கொழும்பு பல்கலைக்கழகத்தின் தசைசார் பேராசிரியர் ஷிரோமி பெர்ணாண்டோ, கொழும்பு பல்கலைக்கழக கல்வித்துறையின் பீடாதிபதி பேராசிரியர் மாரி பெரேரா, களனி பல்கலைக்கழகத்தின் பட்டக் கற்கைகள் பீடத்தின் பேராசிரியர் மனிக் குணசேகர, அதே பல்கலைக்கழகத்தின் ELTU தலைவர் கலாநிதி C.D.S.வெட்டவே இவர்களில் சிலர் மாணவர்களின் ஆய்வுகளில் வெளிவாரி பரீட்சகர்களாகவும் பணிபுரிந்தனர்.

**குறிப்பு:** OUSL மற்றும் ஏனைய தேசிய பல்கலைக்கழகங்களில் கல்விசார் ஆளணியினர் வழங்கிய உதவிகளுக்காக PGIE நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளது. அவர்களது உதவிகள் இல்லாமல் நிறுவகம் செயற்பட்டிருக்க முடியாது.

அத்துடன், இந்த உதவிகளினால் பட்டப்பின் படிப்புகளில் தேசிய, சர்வதேச தராதரங்களைப் பேணவும் முடிந்தது.

## 6. திருத்தப்பட்ட நிதிசார் கூற்றுக்கள் (புதிய படிவத்தின்படி)

### (அ) மீண்டெழும் செலவுகளின் விபரம்

| விடயம் | 2010 ரூபா | 2011 ரூபா |
|---|---|---|
| அ. தனிப்பட்ட வருமானங்கள் | 2,603,399.41 | 2,070,596.24 |
| ஆ. பயணம் | 35,600.00 | 41,511.00 |
| இ. வழங்கல்கள் | 160,186.37 | 369,530.57 |
| ஈ. பேணல் | 67,952.00 | 116,194.40 |
| உ. ஒப்பந்த சேவைகள் | 337,752.72 | 535,419.90 |
| ஊ. ஏனைய | 322,779.98 | 657,143.63 |
| **மொத்தம்** | **3,527,670.48** | **3,790,395.74** |

### (ஆ) மூலதனச் செலவுகளின் விபரம்

| விடயம் | 2010 ரூபா | 2011 ரூபா |
|---|---|---|
| அ. தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு | 30,374.40 | 140,292.60 |
| ஆ. இயந்திராதிகள் கொள்வனவு | - | - |
| இ. கட்டடம் மற்றும் கட்டமைவுகள் கொள்வனவு | - | - |
| ஈ. ஏனைய | 118,897.12 | 828,016.75 |
| **மொத்தம்** | **149,271.52** | **968,309.35** |

### (இ) நிதிசார் முன்னேற்ற விபரங்கள் (செலவினம்)

| விடயம் | | | |
|---|---|---|---|
| அ. மீண்டெழும் செலவு (செயற்றிட்டம் தவிர) | 6,155,000.00 | 3,790,395.74 | 2,364,604.26 |
| ஆ. மூலதனம் (செயற்றிட்டம் தவிர) | 1,250,000.00 | 968,309.35 | 281,690.65 |
| இ. செயற்றிட்டம் (உள்ளூர் நிதியீட்டம்) | - | - | - |
| ஈ. செயற்றிட்டம் (வெளிநாட்டு நிதியீட்டம்) | - | - | - |
| **மொத்தம்** | **7,405,000.00** | **4,758,705.09** | **2,646,294.91** |

### (ஈ) நிதிசார் முன்னேற்ற விபரங்கள் (பெறப்பட்ட வருமானம்)

| வருமான மூலம் | 2011 ஏற்பாடு ரூபா | 2011 சேர்ப்பு ரூபா | மிகை / துண்டு ரூபா |
|---|---|---|---|
| அ. பட்டப்படிப்புகள் | - | | |
| ஆ. பட்டப்பின் படிப்புகள் | 1,206,000.00 | 1,452,660.00 | 246,660.00 |
| இ. நிபுணத்துவ ஆலோசனைகள் | | | |
| ஈ. ஏனைய | 150,000.00 | 363,354.01 | 213,354.01 |
| **மொத்தம்** | **1,356,000.00** | **1,816,014.01** | **460,014.01** |

### (உ) நிதிசார் செயலாற்றுகை பகுப்பாய்வு – 2011

| விடயம் | சூத்திரம் | ஒரு மாணவனுக்கான செலவு ரூபா |
|---|---|---|
| அ. மாணவனுக்கான மீண்டெழும் செலவு (RE) | RE/மாணவர் தொகை | 61,135.41 |
| ஆ. மாணவனுக்கான மூலதனச் செலவு (CE) | CE/மாணவர் தொகை | 15,617.89 |
| **மொத்தம்** | | **76,753.30** |

# PGIE இன் பிரச்சினைகள் தொடர்பாக பேரவை நியமித்த உபகுழுவின் அறிக்கை

**பின்னணி:**

இலங்கையில் ஆங்கிலக் கல்வியை மேம்படுத்துவதற்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்துக்கான பட்டப்பின் நிறுவகம் (PGIE) 2005 டிசம்பரில் ஸ்தாபிக்கப்பட்டது. ஆங்கில மொழி கற்பித்தலில் (ELT) பட்டப்பின் தகைமைகளை பல்கலைக்கழகங்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு வழங்குவதே PGIE இன் பிரதான பணியாக இருந்தது. தமது தகைமைகளை மேம்படுத்திக்கொள்ளும் வாய்ப்புகள் மட்டுப்படுத்தப்பட மூன்றாம் நிலைக் கல்வியாளருக்கு மாத்திரமன்றி, இரண்டாம் நிலைக் கல்வி நிலையங்களில் பணி புரியும் ஆசிரியர்கள், நிர்வாகிகள் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணி புரியும் பயிற்றுநர்களுக்கும் தகைமைகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய அவசரத் தேவை உள்ளது. எனவே. OUSL இல் 2005 ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்ட MA TESL கற்கை நெறி PGIE க்கு கையளிக்கப்பட்டு PGIE இன் முதலாவது புலமை சார்ந்த பொறுப்பாக மாறியது.

கடந்த ஆறு வருடங்களாக இடையூறுகளுக்கு மத்தியில் PGIE மேற்படி MA IESL கற்கை நெறியினை நடத்தி வருகின்றது. ரெடிஸ் பல்கலைக்கழகத்தின் பிரயோக மொழிக் கற்கைகளின் நிலையத்தின் ஒத்துழைப்புடன் வடிவமைக்கப்பட்ட மேற்படி MA TESL ஆங்கில மொழி கற்பித்தலில் சர்வதேச தரங்களைப் பேணுகின்றது. இக்கற்கை நெறியில் கற்பித்தல் பகுதியும் (இரண்டு கல்விசார் கற்கை நெறிகள் மற்றும் இரண்டு ஆய்வுசார் கற்கை நெறிகள்) ஆய்வுப் பகுதியும் (ஆய்வுக் கட்டுரை) அடங்கியுள்ளன.

முதுமாணி மட்டத்தில் ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பது தொடர்பான தகைமையுள்ள விரிவுரையாளர்கள் இல்லாமை ஆரம்பம் முதலே நாம் முகம் கொடுத்த பாரிய பிரச்சினையாகும். அத்துடன், OUSL பின்பற்றும் தொலைக்கல்வி முறையில் இந்நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துவதற்கு போதுமான உதவி ஆளணி இல்லாமையும் நாம் எதிர்கொண்ட பிரச்சினைகளாகும்.

கடந்த ஐந்து வருட காலங்களில் நாம் இன்னுமொரு பிரதான பிரச்சினைகளையும் அடையாளம் கண்டுள்ளோம். பட்டப்பின் கற்கை நெறியை பின்பற்ற விரும்பும் மாணவர்கள் மத்தியில் அதற்குரிய இயலுமை இல்லாமலிருப்பதே அப்பிரப்பினையாகும். இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கு அனுமதி கோருவோர் ஆங்கில விரிவுரையாளர்கள் அல்லது ஆங்கில ஆசிரியர்களாக இருந்த போதிலும், அவர்களது ஆங்கில இயலுமை தேவைப்படும் மட்டத்தில் இருக்கவில்லை. இதன் காரணமாக MA TESL நிகழ்ச்சித் திட்டத்தை பூரணப்படுத்தும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. எனவே, இவ்விடம்ய தொடர்பாக திரும்பவும் சிந்திக்கும் நிலையில் PGIE

உள்ளது. இதன் அடிப்படையில் MA TESL க்கு இட்டுச் செல்லக்கூடிய TESL இல் பட்டப்பின் டிப்ளோமா உயர்கல்வித் தகைமை தேடும் எமது ஆங்கில ஆசிரியர்களுக்கு பொருத்தமாக இருந்தது. இதற்கான அனுமதியை UGC 2010 இல் வழங்கியது. 2011 இல் இந்த டிப்போமா ஆரம்பிக்கப்பட உள்ளது.

**1. ஆளணி பற்றாக்குறை**

(அ) பணிப்பாளர் பதவி - இப்பதவியை ஏற்பதற்கு 2011 மார்ச் 14 முதல் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி இதுவரை பதவியேற்கவில்லை. இவர் இப்பதவியை ஏற்றுக்கொள்வார் என்ற நம்பிக்கை இல்லாமை காரணமாக மொழிக் கற்கைகள் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவர் பதில் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு வேறும் பல பொறுப்புக்கள் உள்ள நிலையில் இந்த எற்பாடு பொருத்தமானதல்ல.

(ஆ) உதவிப் பதிவாளர் மற்றும் உதவி நிதியாளர் பதவிகள் வெற்றிடமாக உள்ளன. இப்பதவிகளும் அண்மைக் காலத்தில் நிரப்பக்கூடிய வாய்ப்புகள் இல்லை. நிறுவகத்தினால் காணப்படுகின்ற வேலைச் சுமையானது முழுநேர நிர்வாக அலுவலர்களின் சேவையை வேண்டி நிற்கின்றது, தற்போது OUSL அச்சகத்தில் பணியாற்றும் உதவி நிதியாளர் நிறுவகத்தில் பதில் நிதியாளராகவும், OUSL மூலதனப் பணிகள் துறையின் உதவிப் பதிவாளர் பதில் பதிவாளராகவும் பணிபுரிகின்றனர்.

(இ) கல்விசார் ஆளணிக்கு நிறுவகத்தில் இரண்டு வெற்றிடங்கள் உள்ளன. இவற்றில் ஒன்று 2011 செப்டம்பரில் நிரப்பப்படும். அடுத்த பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் 2011 மே மாதத்தில் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன. எனவே, புதிய பட்டப்பின் டிப்ளோமா மற்றும் MA TESL ஆரம்பிக்கும் போது புதிய விரிவுரையாளர்கள் இருப்பார்கள். எனினும், பல்கலைக்கழகங்களின் தற்போதைய நிலை நேர்முகப் பரீட்சைகளை நடத்த சாதகமானதாக இல்லை.

(ஈ) அத்துடன், PGIE க்கு தேவைப்படும் கணினி உதவியாளர் மற்றும் புக்கீப்பர் பதவிகளை நிரப்ப UGC இடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இதுவரை பதில் கிடைக்கவில்லை.

(உ) சுருக்கமாகக் கூறினால் PGIE இல் கடுமையான ஆளணி பற்றாக்குறை நிலவுகிறது. நீண்டகால அடிப்படையில் ஆளணி தேவை அடையாளம் காணப்பட்டு UGC க்கு கோரிக்கை விடுக்கப்படும் தேவை உள்ளது.

## 2. இடப்பற்றாக்குறை

(அ) தற்போது PGIE பல்கலைக்கழகத்தின் ஒரு கட்டடத்தில் மூன்று அறைகளில் இயங்கி வருகின்து. இந்த இடவசதி நாளாந்த செயற்பாடுகளுக்கே போதுமானதல்ல. எமது கற்கை நெறிகளையும், மாணவர் எண்ணிக்கைகளையும் அதிகரிக்க நாம் திட்டமிட்டுள்ள படியால் கூடிய இடவசதி தேவைப்படுகின்றது.

## 3. PGIE சட்டத்தைத் திருத்துதல்

நிறுவனத்தின் முன்னேற்றத்துடன் பல்வேறு சட்டப் பிரச்சனைகள் தடையாக உள்ளன. இத்தகைய தடைகள் தொடர்பான பத்திரம் இல.vv/362/11 (பக்கம் 28 - 30) 2011 மே மாதம் 27 ஆம் திகதி நடந்த பேரவையின் 362 ஆவது கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் என்னவெனில், ஏனைய பட்டப்பின் நிறுவனங்களில் பின்பற்றப்படும் வழக்கத்தைப் போல PGIE முகாமைச் சபையின் கூட்டம் PGIE இன் பணிப்பாளரின் தலைமையில் நடக்க வேண்டும். ஆனால், ஆங்கில நிலையியற் குழுவின் தலைவரே இக்கூட்டத்திற்கு தலைமை தாங்குகின்றார்.

பேராசிரியர் H.P.M.குணசேன, பேராசிரியர் W.I.சிறிசேன பேரவை உறுப்பினர்கள்

## 7. கணக்காய்வுக் குழுவின் அறிக்கை

### உள்ளக கணக்காய்வு அறிக்கை

மேற்படி வருடத்திற்குரிய கணக்காய்வு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் OUSL மற்றும் PGIE இன் முக்கிய விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டது. அவை பின்வருமாறு:

**1. முன் கணக்காய்வுகள்**

- UPF ஐ விடுவித்தல்
- கொடைகளை வழங்குதல்
- ஒப்பந்தங்களின் இறுதி கொடுப்பனவை வழங்குதல் மற்றும் தடுப்பு நிதியை விடுவித்தல்.

**2. சரிபார்த்தல்**

31.12.2011 இல் பிரதான களஞ்சியசாலைகளின் வருடாந்த இருப்பை சரிபார்த்தல்

**3. கண்டுபிடிப்புகள் மீது விடுக்கப்பட்ட கணக்காய்வு விசாரணைகள்**

- கல்விசார் செயலாற்றுகை 2010
- நிலையான சொத்துக்களின் பதிவேடு
- வருடாந்த சரிபார்த்தல்: நிலையான சொத்துக்கள்

**4. கணக்காய்வுக் குழு**

OUSL மற்றும் PGIE இன் செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்காக OUSL கணக்காய்வுக் குழு இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையேனும் கூடுகின்றது. கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு நாயகம், உள்ளகக் கணக்காய்வு அலகினால் அனுப்பப்பட்ட விசாரணைகள் மற்றும் OUSL மற்றும் PGIG அவற்றுக்கு வழங்கிய துலங்கல்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படுகின்றன. திருத்தங்கள் செய்வதற்கு ஒரு குழு விதந்துரைகளும் அறிவுறுத்தல்களும் வழங்குகின்றன. திருத்தச் செயற்பாடுகள் தொடர்பான கண்காணிப்பும் மேற்கொள்ளப்படுகின்றது.

**5. ஆளணியினர்**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு பின்வரும் ஆளணியைக் கொண்டுள்ளது:

- உதவி உள்ளகக் கணக்காய்வாளர் (வெற்றிடம்)
- கணக்காய்வு உதவியாளர்
- எழுதுவினைஞர்
- கணினி பிரயோக உதவியாளர்
- நாளாந்த அடிப்படையிலான தொழிலாளி

## 8. கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்றுக்கள்

PGIE
POST GRADUATE
INSTITUTE OF
ENGLISH

# ஆங்கில பட்டப்பின் படிப்பு நிறுவகம்
# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## நிதிக் கூற்றுக்கள்

## 2011

## 2011.12.31 இல் உள்ளவாறான ஐந்தொகை

| 2010.12.31 (ரூபா) | | குறிப்பு இல | | 2011.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|
| | **<u>சொத்துக்கள்</u>** | | | |
| | **<u>நடைமுறையல்லாச் சொத்துக்கள்</u>** | | | |
| 2,073,892.71 | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 14 | | 2,526,860.26 |
| | **<u>நடைமுறைச் சொத்துக்கள்</u>** | | | |
| 4,496,832.82 | குறுகிய முதலீடுகள் | 15 | 5,826,360.32 | |
| 140,634.42 | பொருளிருப்புப் பதிவேடுகள் | | 94,960.23 | |
| 232,084.00 | உத்தியோகத்தர்களிற்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 16 | 173,915.00 | |
| 118,897.12 | வழங்கல்கள் மற்றும் சேவைகளிற்கான முற்பணங்கள் | | - | |
| - | நானாவித முற்பணங்கள் | | - | |
| 37,842.81 | சில்லறைக் கடன்பட்டோர் | | 71,276.40 | |
| 1,162,556.78 | வங்கிலுள்ள காசு | 17 | 1,179,231.60 | |
| | | | | 7,345,743.55 |
| **8,262,740.66** | | | | **9,872,603.81** |
| | **<u>உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்</u>** | | | |
| | **<u>மூலதனம் மற்றும் ஒதுக்கங்கள்</u>** | | | |
| | **<u>மூலதனம்</u>** | | | |
| 2,192,789.83 | செலவழித்த மூலதன மானியம் | | 2,526,860.26 | |
| 100,707.90 | செலவழிக்காத மூலதன மானியம் | 18 | 321,742.02 | |
| - | ஐரீ மூலதனம் | | | |
| | **<u>ஒதுக்கங்கள்</u>** | | | |
| 571,142.00 | ஆங்கில பட்டப்பின்படிப்பு அபிவிருத்தி நிதியம் | | 2,281,162.77 | |
| 2,864,639.73 | | | | 5,129,765.05 |
| | **<u>நடைமுறையல்லாப் பொறுப்புக்கள்</u>** | | | |
| | **<u>குறித்தொதுக்கிய நிதிகள்</u>** | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4,007,085.60 | ஆங்கில பட்டப்பின்படிப்பு அபிவிருத்தி நிதியம் | | 3,959,285.43 | |
| 754,003.00 | பணிக்கொடைனகாக ஏற்பாடு | | 256,600.50 | |
| | | | | 4,215,885.93 |
| | <u>நடைமுறைப்பொறுப்புக்கள்</u> | | | |
| 375,202.66 | அட்டுறு செலவினம் | 19 | 477,059.04 | |
| 261,809.67 | இலங்கை திறந்த பல்கலைக்கழகத்திற்கு செலுத்த வேண்டியவை | | 33,117.14 | |
| - | சில்லறைக் கடன்கொடுத்தோர் | | 16,776.65 | |
| | | | | 526,952.83 |
| **8,262,740.66** | | | | **9,872,603.81** |

- சிரேஸ்ர காசாளரால் தயாரிக்கப்பட்டது -

முகாமைத்துவ சபையின் சார்பாக

பணிப்பாளர்

சிரேஸ்ர உதவிப் பதிவாளர்

## ஆங்கிலப் பட்டப்பின்படிப்பு நிறுவகம்
## 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவுக்கணக்கு

| 2010 (ரூபா) | | குறிப்பு இல | | 2011 (ரூபா) |
|---|---|---|---|---|
| | **வருமானம்** | | | |
| 2,748,000.00 | மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியம் | | | 3,187,000.00 |
| 6,638.00 | புனரமைப்புச் செலவினத்திற்கான அரசாங்க மானியம் | | | 60,656.53 |
| - | புனரமைப்புச் செலவினத்திற்கான பங்களிப்பு | | | 47,800.17 |
| 40,100.00 | பதிவுக் கட்டணம் | | | 35,810.00 |
| 963,980.00 | பாடநெறிக் கட்டணம் | | | 1,043,440.00 |
